ஏற்கக்கூடியதாக இல்லை. நடந்தது தேரோட்டம் அல்ல; அது ஒரு சப்பரம். சப்பரம் என்பது ஒரு சிறிய வண்டி. மாட்டு வண்டியில் சக்கரம் இருப்பதுபோல் இரண்டு சக்கரம் இருக்கும். அதனை இழுத்துச் செல்லமாட்டார்கள். தள்ளிக்கொண்டு போவார்கள். நிலை தடுமாறி அந்தச் சப்பரம் மின் கம்பியில் உரசியதால், அங்கே அந்தத் துயரச் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது. அதற்காக நாம் அனைவரும் மிகவும் வருந்துகிறோம்; கவலைப்படுகிறோம்; அவர்களுக்காக நாம் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றோம். இருந்தபோதிலும், ஏற்றுக்கொள்ளாத எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே இப்படிச் செய்வது ஏற்கக்கூடியதாகத் தெரியவில்லை என்பதைச் சொல்லி, நடந்த சம்பவம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். முன் அனுமதி பெற்று இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அரசின் கவனத்தை ஈர்த்து, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

4. வெளிநடப்பு செய்து, மீண்டும் அவைக்கு வந்து, பேரவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இங்கு நடந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் நீங்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். ஓர் அசாதாரண சூழ்நிலையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் களிமேடு கிராமத்தில் நடந்த சப்பர பவனியின்போது நடைபெற்ற சம்பவம் குறித்து எல்லோரும் வருத்தத்தைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைக் கேள்விப்பட்டவுடன், உடனடியாக அவைக்கு வந்து அனுதாபம் தெரிவித்து, அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததோடு, அஞ்சலி செலுத்துவதற்காக,—சட்டமன்றத்திலேயே அவர்தான் ஓர் இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து, அதற்கு அனுதாபம் தெரிவித்துவிட்டு—நேரடியாக சம்பவ இடத்திற்குச் சென்று இறந்தவர்களுக்கு மரியாதை செய்யவும், காயப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொல்லவும், அவர்களுடைய குடும்பத்தாருக்கு நிதியுதவி கொடுக்கவும் சென்றிருக்கின்றார்கள். கேள்விப்பட்டவுடன் தாயுள்ளத்தோடு சென்றிருக்கின்றார்கள்.

அந்த ஆலயத்தைப் பற்றி எல்லோரும் சொன்னார்கள். ஊர் ஆலயம். அந்த ஊர் மக்கள் தொடர்ந்து 94 ஆண்டுகளாக இதே முறையில்தான், சப்பர பவனி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதிகாலையில் நடந்த சம்பவம் எல்லோருக்கும் மனதிற்கு வருத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதுசம்பந்தமாக விதி 56–ல் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்கள் விதி 55–ன்கீழும் அறிவிப்பு கொடுத்தார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச எழுந்தவுடனே, 'அந்தக் கருத்தை zero hour–ல் நீங்கள் பேசுங்கள்' என்று சொல்லி, விதி 55, 56–ல் அறிவிப்பு தந்திருக்கிறீர்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக இதை நான் எடுத்து, எல்லோரும் தங்கள் அனுதாபங்களை, தங்கள் கட்சி சார்பாக தெரிவிக்கலாம் என்ற அடிப்படையில்தான் அந்த வாய்ப்பை எல்லோருக்கும் கொடுத்தோம்.

அவர்கள் பேசி முடித்தவுடன், அவர்களாகவே வெளிநடப்பு செய்துவிட்டார்கள். மற்ற உறுப்பினர்கள் யாரும் அதற்குக் காரணமில்லை. அவர்களே பேசினார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பில் ஒரு முறை எந்தக் குறுக்கீடும் இல்லாமல் முழுமையாகப் பேசி முடித்த பின்பு, அனுதாபம் தெரிவித்து, அவர்கள் கட்சியில் இருந்தும் இப்படிப்பட்ட உதவிகள் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு வெளியே போகிறார்கள்.

அதற்குப் பிறகு, மற்ற உறுப்பினர்கள் பேசினார்கள். அதற்குப் பிறகு இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை அவர்கள் பேசினார்கள். அவர் எந்தத் தவறான வார்த்தையையும் பதிவு செய்யவில்லை. அவர் மகாமக நிகழ்ச்சியில் நடந்த சம்பவம் குறித்து சட்டமன்றத்தில் பிரச்சினை வந்தபோது சட்டமன்றத்தில் முன்னாள் முதல்வர் அம்மையார் அவர்கள் என்ன பேசினார்களோ, அவைக் குறிப்பில் என்ன இருக்கிறதோ, அதை அப்படியே repeat செய்திருக்கிறாரே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஒரு வார்த்தைகூட அவருடைய கருத்து எதையும் தெரிவிக்கவில்லை. அவ்வளவுதான். அது எல்லோருக்கும் தெரிந்தது. கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார். ஏற்கெனவே அந்த அம்மையார் பதிவு செய்திருப்பதையும், அவர்கள் ஆட்சியில் பதிவு செய்யப்பட்டதையும், அம்மையார் பதிவு செய்ததையும் நீக்க வேண்டுமென்று சொன்னால், அந்த அம்மையாருடைய கருத்துக்கு எதிர் கருத்தாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்றார்களா என்று

எனக்குத் தெரியவில்லை. அவைக் குறிப்பில் இருக்கின்ற ஒரு கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். அதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தோ, எதிர் கருத்தோ, அவருடைய சொந்தக் கருத்தோ அதில் பதிவாகவில்லை. ஆகவே, அதை நீக்க வேண்டும் என்று சொல்லி, இந்த இடத்தில் வந்து நின்று அவர்கள் சொல்கின்றார்கள். அதற்கும் நான் என்ன சொன்னேன் என்றால், 'ஏற்கெனவே விதி 55-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கக்கூடிய அந்தத் தீர்மானங்கள் குறித்து பேசிமுடித்த பின்பு, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்' என்று சொன்னேன்.

ஒன்று, சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானமோ அல்லது எந்த தீர்மானமாக இருந்தாலும் அந்தத் தீர்மானத்தில் பேசி முடித்து வெளிநடப்பு செய்த பின்பு, எங்கிருந்தோ ஞானோதயம் வந்ததுபோன்று மீண்டும் அவையில் வந்து பேசுவதில் என்ன நியாயம் இருக்கிறது என்று தெரியவில்லை.

பிற்பகல் 12-20

அவைக் குறிப்புகள் எல்லாம், அவையில் பேசுவது எல்லாவற்றையும் பொது மக்கள் எல்லோரும் நேரடி ஒளிபரப்பாகத்தான் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் நண்பர், மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசும்போதுகூட காங்கிரஸ் மற்றும் ஒருசில உறுப்பினர்களைச் சுட்டிக்காட்டினார்கள். அப்போதுகூட, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதையும் நீங்கள் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று நான் சொன்னேன். அவர்களும் என்ன சொன்னார்கள் என்றால், மதுரையில் கள்ளழகர் ஆற்றில் இறங்கும்போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது என்று. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் அந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தபோது, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைத் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். இது 'பக்திப் பசியில் கூட்டம் அதிகமாக வந்துவிட்டதால் சிறு அசம்பாவிதம் நிகழ்ந்ததாக' உறுப்பினர் அவர்களே பதிவு செய்துவிட்டார்கள்.

இந்த அரசு எல்லா மதத்தினருக்கும் சம வாய்ப்புக் கொடுத்து, எல்லா மதத்தினருக்கும் வழிபாடுகளுக்கும் ஆதரவு கொடுக்கின்ற அரசு. விருப்பு, வெறுப்பு இல்லாத ஓர் அரசு. நம்முடைய இந்திய

பாதுகாப்பு கல்லூரி டெல்லியில் இருக்கிறது. அந்தக் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், இந்தியாவிற்கு மிக நெருக்கமாக உள்ள ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளில் உள்ள பாதுகாப்புத் துறை அதிகாரிகளெல்லாம் இந்தியாவிலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டு, முடிவில் நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்களைச் சந்தித்து, இங்குள்ள பாதுகாப்பு எப்படி இருக்கிறது என்பது குறித்து அவர்களுடன் விவாதம் நடத்தியபோது, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இரண்டே வார்த்தைகளில் அற்புதமாக பதில் சொல்லியிருக்கிறார்கள். "அமைதியாகவும், நல்லிணக்கமாகவும் இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு" என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் இந்த அரசு பொறுப்பேற்று ஓராண்டு முடியப்போகிறது. ஒருபோதும், மதத்தை வைத்து அரசியல் செய்து, அதை வைத்து கட்சியை நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைக்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய எண்ணம் என்னவென்றால்—எல்லா மக்களுக்கும் சமமாகச் செய்ய வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசும்போதுகூட, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நெருடல் ஏற்படக்கூடியவண்ணமோ, அவர்கள் செய்ததைப் பற்றிய குற்றச்சாட்டுகளோ சொல்லக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, அவ்வளவுதூரம் அவர்களுக்கு அறிவுரை சொல்லித்தான் அவர்களும் பேசுகிறார்கள். சபை நாகரிகமாக நடந்துகொண்டிருக்கிறது. போதுமான அளவிற்கு, தாராளமாக, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் சம வாய்ப்புக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்கூட கேள்வி நேரத்தைக் குறையுங்கள் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட நாள் ஒன்றுக்கு 10, 20 நிமிடங்களுக்குமேல் எதிர்க்கட்சியைச் சார்ந்த நண்பர்கள் பேசுவதற்கு, துணைக் கேள்வி கேட்பதற்கு நாம் அனுமதி கொடுக்கிறோம். காரணம், சபை நாகரிகத்துடன் நடக்க வேண்டும் என்பதால்தான். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தாராள எண்ணத்தோடு சபை நாகரிகமாக நடக்கிறது.

ஆகவே, எந்த வகையிலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி முடித்து, வெளிநடப்பு செய்து, மீண்டும் வந்து இந்த சபையில் பேசியதைத் தவறாக யாரும் பேசவில்லை. முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், மகாமகம் சம்பந்தமாக அவையில்

குறிப்பிட்டதைத்தான் அவர் வாசித்தார். அவருடைய கருத்தாகச் சொல்லவில்லை, அவர்கள் வாசித்ததை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று அவர் கேட்டது நியாயமா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, உங்களுடைய முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமம், தேர்த் திருவிழாவின்போது ஏற்பட்ட மின் விபத்தில் 11 பேர் உயிரிழந்தது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாக, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். சுருக்கமாக 2 நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.* (குறுக்கீடு) *அவர் பேசி முடித்ததும் வாய்ப்பு தருகிறேன்.* (குறுக்கீடு) *அவர் பேசி முடிக்கட்டும். வாய்ப்பு தருகிறேன்.* (குறுக்கீடு) Please, *உட்காருங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், களிமேடு கிராமத்தில் இன்று அதிகாலையில் எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு, அந்த விபத்திலே 11 இன்னுயிர்களை இழந்திருக்கின்றோம். 14–க்கும் மேற்பட்டோர் காயமடைந்து, தங்கள் இன்னுயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். விபத்துகள் நடப்பது இயற்கைதான். கடந்தகால ஆட்சியிலும்கூட மௌலிவாக்கம் உட்பட பல்வேறு பகுதிகளில் விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், விபத்து நடந்தவுடனேயே அந்த இடத்திற்கு அன்றைய முதலமைச்சர்கள் சென்று பார்த்தார்களா என்று நாம் வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால், இல்லை. 3–00 மணிக்கு விபத்து நடந்திருக்கிறது. முதலாவதாக சட்டமன்றத்தில் முதல் ஒரு மணி நேரம் கேள்வி நேரம்தான். ஆனால், இது எவ்வளவு முக்கியமான ஒரு பிரச்சினை; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இதில் எவ்வளவு பெரிய கவலை இருக்கின்றது என்பதை எடுத்து வைக்கக்கூடிய வகையில், 7 மணிநேரம் கழித்து சட்டமன்றம் கூடும்போது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு வந்து, இதுகுறித்து ஓர் இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றி, உடனடியாக தஞ்சாவூருக்கு, பாதிக்கப்பட்ட பகுதிக்கு, அந்த மக்களுக்கு ஆறுதல் அளித்து, உரிய நிவாரணப் பணிகளைச் செய்வதற்காகச்*